ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

நான்காம்பத்து

______________

7-ஆம் திருமொழி - தங்கையைமூக்கும்

______*_______

* தங்கையைமூக்கும்தமையனைத்தலையும்தடிந்த எம்தாசரதிபோய் *
எங்கும்தன்புகழாவிருந்துஅரசாண்ட எம்புருடோத்தமனிருக்கை *
கங்கைகங்கையென்றவாசகத்தாலே கடுவினைகளைந்திருகிற்கும் *
கங்கையின்கரைமேல்கைதொழநின்ற கண்டமென்னும்கடிநகரே. (1)

சலம்பொதியுடம்பிந்தழலுமிழ்பேழ்வாய்ச் ச்ந்திரன்வெங்கதிஅஞ்ச *
மலர்ந்தெழுந்தணவுமணிவண்ணவுருவின் மால்புருடோத்தமன்வாழ்வு *
நலம்திகழ்சடையான்முடிக்கொன்றைமலரும் நாரணன்பாததுழாயும் *
கலந்திழிஉப்னலால்புகர்படுகங்கைக் கண்டமென்னும்கடிநகரே. (2)

அதிமுகமுடையவலம்புரிகுமிழ்த்தி அழலுமிழ்ஆழிகொண்டெறிந்து * அங்கு
எதிர்முகவசுரர்தலைகளையிறும் எம்புருடோத்தமனிருக்கை *
சதுமகன்கையில்சதுப்புயந்தாளில் சங்கரன்சடையினில்தன்கி *
கதிர்முகமணிகொண்டிநிபுனல்கன்கைக் கண்டமென்னும்கடிநகரே. (3)

இமையவர்எறுமாந்திருந்தரசாள ஏற்றுவந்தெதிர்பொருசேனை *
நமபுரம்நணுகநாந்தகம்விசிறும் நம்புருடோத்தமன்நகர்தான் *
இமவந்தம்தொடங்கிஇருங்கடலளவும் இருகரைஉலகிரைத்தாட *
\# கமையுடைப்பெருமைக்கங்கையின்கரைமேல் கண்டமென்னும்கடிநகரே. (4)

உமுவதோர்படையும்உலக்கையும்வில்லும் ஒண்சுடராழியும்சங்கும் *
மமுவொடுவாளும்படைக்கலமுடைய மால்புருடோத்தமன்வாழ்வு *
எமுமையும்கூடிஏண்டியபாவம் இறைப்பொமுதளவினில்எல்லாம் *
கமுவிடும்பெருமைக்கங்கையின்கனைமேல் கண்டமென்னும்கடிநகரே. (5)

தலைப்பெய்துகுமுறிச்சலம்பொதிமேகம் சலசலபொழிந்திடக்கண்டு *
மலைப்பெருங்குடையால்மறைத்தவன்மதுரை மால்புருடொத்தமன்வாழ்வு *
அலைப்புடைத்திரைவாய் அருந்தவமுனிவர் அவபிரதம்குடைந்தாட *
கமுவிடும்பெருமைக்கங்கையிகரைமேல் கண்டமென்னும்கடிநகரே. (6)

விற்பிடித்திறுத்துவேழத்தைமுறுக்கி மேலிருந்தவந்தலைசாடி *
மற்பொருதெழப்பாய்ந்துஅரையனையுதைத்த மால்புருடோத்தமன்வாழ்வு *

அற்புதமுடையஐராவதமதமும் அவரிளம்படியரொண்சாந்தும் *
கற்பகமலரும்கலந்திழிகங்கைக் கண்டமென்னும்கடிநகரே. (7)

திரைபொருகடல்சூழ்திண்மதிள்துவரைவேந்து தன்மைத்துனன்மார்க்காய் *
அரசினையவியஅரசினையருளும் அரிபுருடோத்தமனமர்வு *
நிரைநிரையாகநெடியனயூபம் நிரந்தரம்ஒழுக்குவிட்டு * இரண்டு
க்ரைபுரைவேள்விப்புகைகமழ்கங்கைக் கண்டமென்னும்கடிநகரே. (8)

* வடதிசைமதுரைசாளக்கிராமம் வைகுந்தம்துவரைஅயோத்தி *
இடமுடைவதரியிடவகையுடைய எம்புருடோத்தமனிருக்கை *
கடவரையதிரத்தரணிவிண்டிடியத் தலைப்பற்றிக்கரைமரம்சாடி *
கடலினைக்கலங்கக்கடுத்திழிகங்கைக் கண்டமென்னும்கடிநகரே. (9)

* மூன்றெழுத்ததனைமூன்றெழுத்தனால்மூன்றெழுத்தாக்கி*மூன்றெழுத்தை
என்றுகொண்டிருப்பார்க்குஇரக்கம்நன்குடைய எம்புருடோத்தமனிருக்கை *
மூன்றடிநிமிர்த்துமூன்றினில்தோன்றி மூன்றினில்மூன்றுருவானான் *
காந்தடம்பொழில்சூழ்கங்கையின்கரைமேல் கண்டமென்னும்கடிநகரே. (10)

* பொங்கொலிகங்கைக்கரைமலிகண்டத்து உறைபுருடோத்தமனடிமேல் *
வெங்கலிநலியாவில்லிபுத்தூர்க்கோன் விட்டுசித்தன்விருப்புற்று *
தங்கியஅன்பால்செய்தமிழ்மாலை தங்கியநாவுடையார்க்கு *
கங்கையில்திருமால்கழலிணைக்கீழே குளித்திருந்தகணக்காமே. (11)

அடிவரவு: தன்கைய சலம் அதிர் இமையவர் உழுவதோர் தலைப்பெய்து வில்திரை வடதிசை மூன்று பொங்கு மாதவத்தோன்.